# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 12 /2021

## வழக்கு சாட்சி :PW4(LW12)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ரவிக்குமார் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | சங்கர் | தொழில் | : | பால்பண்ணை தொழில் |
| கிராமம் | : | பெருமநாடு | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 50 |

(எதிரி ஆஜர் இல்லை.எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 24th day of April 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது பெருமநாட்டில் குடியிருந்து வந்து பால் பண்ணை வைத்து தொழில் செய்து வருகிறேன். கடந்த 02.06.2020 ம் தேதி புதுக்கோட்டை to குடுமீயான்மலை ரோடு அருகே சாலை விபத்து நடந்தது. மறுநாள் 03.06.2020 ம் தேதி காலை 06.00 மணியளவில் நான் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த தெரு குழாயில் தண்ணீர் பிடித்துக் கொண்ருந்தேன். என்னுடன் ராமையா என்பவரும் இருந்தார். அப்போது போலிசார் அங்கு வந்து விபத்து சம்மந்தமாக விசாரணை செய்து வரைபடம் வரைந்த போது நான் சாட்சியாக உடன்இருந்து பார்வை மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2/PW4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எ.த.கு.வி</u>

1. மேற்சொன்ன விபத்தில் இறந்து போன குழந்தை யோகிதாவின் குடும்பத்தினரும், எனது குடும்பத்தினரும் உறவினர்கள் என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கும் போது நான் குழாயில் தண்ணீர் பிடித்து கொண்டிருந்தேன் என்றால் சரிதான். வழக்கு சம்பவம் நடந்த இடத்திற்கும், நான் தண்ணீர் பிடித்த இடத்திற்கும் சுமார் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 20 , 25 அடி துாரம் இருக்கும். கிழ, மேல் குடுமியான்மலை ரோட்டிற்கு எந்த புறம் எனது வீடு உள்ளது என்றால் வலது புறம் உள்ளது. நான் படம் வரைந்த பேப்பரில் கையொப்பம் செய்தேனா என்றால்

இல்லை, மனு எழுதியிருந்தது அதில் கையொப்பம் செய்தேன். நான் தண்ணீர் பிடித்துக் கொண்டிருக்கும் போது போலிசார் எழுதிய பேப்பரில் என்னை கையொப்பம் செய்ய சொன்னார்கள் , நான் கையொப்பம் செய்தேன் , அதில் என்ன விவரம் இருந்தது, என்பது பற்றி அவர்களும் சொல்லவில்லை, நானும் கேட்கவில்லை.

2. குழந்தை இறந்து போனது சம்மந்தமாக நான், புகார்தாரர் பரமேஷ்வரி, அவரின் தந்தை , மற்ற உறவினர்கள் ஆகியோர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து விசாரணை செய்த போது நானும் சென்றேனா என்றால் நான் செல்லவில்லை, அவர்கள் சென்றார்கள். நான் சொல்வது போல் சம்பவம் நடந்த இடத்தில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு , சம்பவ இடத்தில் கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.